OS No.34/2015, நாள்:15.12.2020

போச்சம்பள்ளி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜர். நீதிமன்றத்தில் உதவியாளர் திருமதி.சரஸ்வதி அவரால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது. உரிமையியல் விசாரணை சட்டம் பிரிவின் கீழ் விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பட்டாபிராமன் | வயது | : 71 |
| தந்தை பெயர் | : கோபால்கவுண்டர் | வேலை | : விவசாயம் |
| கிராமம் | : புளியம்பட்டி | நாட்டினம் | : இந்து |
| தாலுக்கா | : போச்சம்பள்ளி | சாதி | : -- |

<u>வா.சா.2 ___ பட்டாபிராமன் ஆஜர் குறுக்கு விசாரணை :-</u>

பட்டாளம்மான் கோவிலுக்கு மொத்தம் எவ்வளவு நிலம் உள்ளது என்றால் சுமார் 4 ஏக்கர் இருக்கும். அதற்கு செக்குபந்தி தெரியுமா என்றால் என்னுடைய பட்டா நிலத்திற்கு மேற்கு, ரோடிற்கு கிழக்கு, சின்னதம்பி நிலத்திற்கு தெற்கு, ரோடுக்கு வடக்கு இதன் மத்தியில் உள்ளது. சர்வே எண் தெரியுமா என்றால் புல எண்.241 ஆகும். தற்போதைய உட்பிரிவு தெரியுமா என்றால் தெரியாது. அந்த நிலத்திற்கு அருகில் ஒரு பக்க எல்லையாக என்னுடைய நிலம் இருப்பதாக கூறுவதே பொய்யானது என்று சொன்னால் சரியல்ல. பட்டாளம்மன் நிலத்தை பற்றி எனக்கு தெரியாது என்றும், நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. அந்த நிலத்தில் ஆறுமுக கவுண்டர் கரும்பு, நெல், கிழங்கு ஆகியவற்றை பயிர்செய்து அனுபித்து வருகிறார் என்று கூறுவது பொய்யானது என்று சொன்னால் சரியல்ல. பட்டாளம்மன் நிலத்தை கோவிந்த பூசாரி பயிர்செய்து அதில் வந்த வருமானத்தை வைத்து கோவிலை வைத்து பராமரித்து வந்தார் என்றும்

அவருடைய இறப்பிற்கு பின்னிட்டு ராமச்சந்திரன்தான் பயிர்செய்து வருகிறார் என்றால் சரியல்ல. ஆறுமுக கவுண்டருக்கும், கோவிந்தன் பூசாரிக்கும் ஏற்கனவே நீதிமன்றத்தில் வழக்கு இருந்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. ஏற்னவே ஆறுமுக கவுண்டர் தான் குத்தகைதாரர் என்று வழக்கு தாக்கல் செய்து இல்லை என்று அவருக்கு எதிராக தீர்ப்பு வழங்கப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. இந்து அறநிலையத்துறையிலேயே கோவிந்தன் பூசாரிதான் பயிர்செய்து வருவதாக முடிவாகிவிட்டது என்றும் அறுமுக கவுண்டர் நிரந்தர குத்தகைதாரர் அல்ல என முடிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. கோவில் கும்பாபிஷேகம் எப்போது நடந்தது என்றால் 2015ம் ஆண்டு நடந்தது. யார் தலைமையில் நடைபெற்றது என்றால் சிவலிங்க கவண்டர் தலைமையில்தான் நடந்தது. கும்பாபிஷேகம் நடந்தபோது ராமச்சந்திரன்தான் பூசாரியாக இருந்தார் என்றால் சரிதான். கோவிந்தனுக்கு பின்னிட்டு ராமச்சந்திரன்தான் விவசாயம் செய்துவருகிறார் என்றும் அதன் அடிப்படையில்தான் சிவலிங்கம் சேர்ந்து கும்பாபிஷேகம் செய்தார் என்றால் சரியல்ல. அவ்வாறு செய்தபோதுதான் ஏதோ ஆறுமுக கவுண்டர் விவசாயம் செய்தபோது பிரதிவாதி தடுத்ததாக பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. குத்தகை பணத்தை ஆறுமுக கவுண்டர் கோவிந்த பூசாரியிடம் கொடுத்ததாக கூறுவது பொய்யானது என்று சொன்னால் சரியல்ல. எந்த ஆண்டு குத்தகை பணம் கொடுத்தார் என்றால் 1965ம் ஆண்டு முதலே கொடுத்துவருகிறார். எவ்வளவு கொடுத்தார் என்றால் ஆண்டு ஒன்று ரூ.100 வீதம் கொடுத்துவந்தார். அவ்வாறு கொடுத்தபோது அந்த ரசீதில் நான் கையொப்பமிட்டு கொடுத்துள்ளேன். எத்தனை முறை அவ்வாறு கையொப்பமிட்டுள்ளேன் என்றால் 5 முறை கையொப்பமிட்டுள்ளேன். நான் அரியபூபதி சொல்லி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் அவ்வாறு எந்த குத்தகை பணமும் ஆறுமுக கவுண்டர்

கொடுத்ததில்லை என்று சொன்னால் சரியல்ல. எந்த ஆண்டு கோவிந்தன் பூசாரி பணத்தை பெற்றக்கொள்ளாததால் அரசாங்கத்தில் குத்தகை பணம் செலுத்தப்பட்டது என்றால் அது எனக்கு தெரியாது. எத்தனை ஆண்டுகாலமாக ஆறுமுக கவுண்டர் படுத்த படிக்கையாக இருக்கிறார் என்றால் 5 ஆண்டுகளாக இருக்கிறார் என்றால் சரிதான். கோள் ஊன்றித்தான் நடமாடுகிறார். நேரில் சென்றால் அடையாளம் தெரிகிறதா என்றால் இல்லை. 5-6 ஆண்டுகளாக ஆறுமுக கவுண்டருக்கு உடல்நிலை சரியில்லாததால் அரியபூபதிதான் விவசாம் செய்துவருகிறார் என்று கூறுவது பொய்யானது என்று சொன்னால் சரியல்ல. நான்அரியபூபதி சோளம், கம்பு கொல்லு பயிர்செய்தவாக கூறுவது பொய்யானது என்றும் அவர் தூண்டுதலின்பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. பொய்யான ஆவணங்களை தயார் செய்து ஆறுமுககவுண்டரும் அரியபூதியும் வழக்கு நடத்தி வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. அதற்கு சாதகமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் ன்று சொன்னால் இன்றைக்கு ராமச்சந்திரன்தான் பயிர்செய்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல.

ஒம்./-ஏ. செல்வகுமார்,பி.இ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி.